

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா, 101வது பிறந்தநாள் விழா, விளையாட்டு போட்டி பரிசளிப்பு என முப்பெரும் விழா நடந்தது. திண்டுக்கல் மாநகர செயலாளரும், துணை மேயருமான ராஜப்பா தலைமை வகித்தார். மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், மேற்கு பகுதி செயலாளர் பஜ்லுல் ஹக். மாவட்ட துணை செயலாளர் பிலால் உசேன் முன்னிலை வகித்தனர். கழக துணை பொது செயலாளரும், ஊரக வளர்ச்சி துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி கல்வெட்டினை திறந்தும், கழக கொடியை ஏற்றி வைத்தும், விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கியும் சிறப்புரையாற்றினார். இதில் கிழக்கு மாவட்ட செயலாளரும், பழநி எம்.எல்.ஏ.வுமான இ.பெ.செந்தில்குமார், மாநகர அவை தலைவர் முகமது இப்ராகிம், பொருளாளர் சரவணன், மண்டல தலைவர்கள் ஆனந்த், பகுதி செயலாளர்கள் ஜானகிராமன், சந்திரசேகர், ராஜேந்திரகுமார், வார்டு செயலாளர் செந்தில்குமார், பொதுக் குழு உறுப்பினர் அக்பர், அவை தலைவர் கண்ணன், மாவட்ட பிரதிநிதி மணி கண்டன், மாமன்ற உறுப் பினர்கள் ஸ்டெல்லா, விஜயா, ஹசீனா, அமலோர் பமேரி, வசந்தி, சுபாசினி, பானுமதி, கிருபாகரன், மார்த்தாண்டன், குலோத் துங்கன், சிறுபான்மை பிரிவு காசிம், நசீர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்கு கீழ்உள்ள தேசிய நெடுஞ்சாலைத்துறையில் இராஜபாளையம் நகர்ப்பகுதியான நேரு சிலை முதல் சொக்கர்கோவில் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலை மற்றும் திருவில்லிபுத்தூர் பகுதியிலுள்ள தேசிய நெடுஞ்சாலையும் மிகவும் பழுதடைந்து குண்டும் குழியுமாக காணப்பட்டுகிறது இச்சாலையில் விரைவில் தார்ச்சாலை அமைக்குமாறு ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிற்கு கீழ்உள்ள தேசிய நெடுஞ்சாலைத்துறை ஆணையத்தின் மண்டலஅதிகாரியை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் வலியுறுத்தியதைத்தொடர்ந்து இராஜபாளையம் சட்ட மன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன். 20.10.2022,12.07.2023 மற்றும் 20.05.2024 ஆகிய நாட்கள் நேரிலும் பலமுறை தொலைபேசியிலும் தொடர்பு கொண்டு தார்சாலை அமைக்குமாறு வலியுறுத்தினார்,இத்தொடர் முயற்சியின் பலனாக இராஜபாளையம் முதல் கிருஷ்ணங்கோவில் வரை தார்ச்சாலை அமைக்கும்பணி தொடங்கியுள்ள நிலையில் இராஜபாளையம் அரசு மருத்துவமனை அருகில் தார்ச்சாலை அமைக்கும் பணியை எஸ். தங்கப்பாண்டியன், எம்.எல்.ஏ, பார்வையிட்டார், இந்நிகழ்வில் பணிதள பொறியாளர் மனோகரன் அவர்களிடம் தார்ச்சாலை தரமானதாக அமைக்கப்படவும் இராஜபாளையம் நகர் பகுதியில் எப்போது தார்ச்சாலை அமைக்கப்படவுள்ளது என கேட்கையில் பணிதள பொறியாளர் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் இரவு நேரங்களில் பணியை தொடங்கவுள்ளதாக கூறினார், அதற்கு எம்.எல்.ஏ, நகர் பகுதிகளில் தார்ச்சாலை அமைக்கும் பணியை இன்று இரவே தொடங்கி இரண்டு நாட்களில் முடிக்கப்பட வலியுறுத்தினார். இந்நிகழ்வில் நகர செயலாளர்கள் ராமமூர்த்தி, மணிகண்டராஜா, சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன், மாணவரணி நாகேஷ்வரன் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தமிழ்ப்புதல்வன் திட்டம்:

# தமிழ்நாட்டின் மாணவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், ஆக. 12 -

தமிழக மாணவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்றி உயர்கல்வி கற்கும் அளவிற்கு உயர்த்தி மாணவர்கள் சமுதாய நலனை காப்பாற்றி வருபவர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் என்று திண்டுக்கல் அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற தமிழ்புதல்வன் துவக்கவிழாவில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசியதோடு திண்டுக்கல்லுக்கு அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரி தந்தவர் முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் என்று மாணவர்கள் மத்தியில் அமைச்சர் ஐ. பெரியசாமி பெருமிதமாக பேசினார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் படித்து உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கு தமிழக அரசின் உயர்ந்த திட்டமான தமிழ்புதல்வன் திட்ட துவக்க விழா ரெட்டியார்சத்திரத்தில் உள்ள அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட ஆட்சியர் மொ. ந.பூங்கொடி தலைமை தாங்கினார். திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி. செந்தில்குமார், கோட்டாட்சியர் சக்திவேல், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன், ரெட்டியார்சத்திரம் ஒன்றிய பெருந்தலைவர் ப.க.சிவகுருசாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். கோவையில் தமிழக முதல்வர் தமிழ்புதல்வன் திட்டத்தை துவக்கி வைத்தபின்பு விழா ஆரம்பமானது. விழாவில் மாணவர்கள் மத்தியில் திமுக மாநில துணை பொதுச்செயலாளரும், ஊரக வளர்;ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் பேசும் போது காணொளி காட்சி மூலம் நீங்கள் அனைவரும் திராவிட மாடல் ஆட்சி நாயகன் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்து மாணவர் சமுதாயத்தை உயர்த்தும் எண்ணத்தோடு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் போற்றும் அளவிற்கு சிறப்பான ஆட்சியை செய்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பேச்சை கேட்டீர்கள். அதற்கு பின் நான் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இருந்தாலும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் வருகை தந்துள்ளீர்கள். உங்கள் மத்தியல் ஒரு விஷயத்தை சொல்ல வேண்டும். காரணம் தமிழகத்தின் அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரி மூலம் உறுப்பு கல்லூரிகளை மாவட்டங்களில் தொடங்கலாம் என அறிவிப்பு வந்த போது முத்தமிழ் அறிஞர் முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெறும்போது இங்கு இந்த கல்லூரி (அறிஞர் அண்ணா பொறியியல் கல்லூரி) கொண்டு வர உத்தரவிட்டார். இதன் மூலம் கடந்த 13 வருடங்களில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பொறியியல் பயின்றுள்ளார்கள.; அதன்பின்னர் திராவிட மாடல் ஆட்சி நாயகன் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நல்லாட்சியில் ஒவ்வொரு தொகுதிக்கும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கொண்டு வரப்பட்டது. விரைவில் நத்தம் தொகுதிக்கும் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வர உள்ளது. தமிழக மாணவர்கள் உயர்கல்வி கற்கும் அளவிற்கு அவர்களின் கல்வியை பாதுகாத்து வரும் தமிழக முதல்வர் அவர்கள் பல்லாண்டு வாழ வேண்டும் பல சலுகைகளை பெற வேண்டும் என வாழ்த்தி மாணவர்களுக்கு தமிழ்புதல்வன் திட்டம் மூலம் உதவித்தொகை பெறுவதற்கான வங்கி காசோலையை வழங்கினார். நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் தண்டபாணி, ஆத்தூர் நடராஜன், திண்டுக்கல் மேற்கு தாசில்தார் வில்சன் தேவராஜ், மாவட்ட சமூகநல அலுவலர் ஜி.புஷ்பகலா, மாவட்ட குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் சி.பூங்கொடி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கிருஷ்ணன், மலரவன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக துணை செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி அமைப்பாளர் கணேசன், துணை அமைப்பாளர் ப.ராஜேஷ் பெருமாள், ஆத்தூர் சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், ஒன்றிய துணை பெருந்தலைவர் ராஜேஸ்வரி, மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், பொறியாளர் அணி அமைப்பாளர் செந்தில்குமரன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் விடுதலை முருகன், கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் பாறைப்பட்டி வாஞ்சிநாதன், மாவட்ட இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் அருண் ஜெகநாதன், அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், மாவட்ட கவுன்சிலர் சுப்புலெட்சுமி சண்முகம், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் செல்வம், கன்னிவாடி பேரூராட்சிமன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், ஸ்ரீராமபுரம் பேரூராட்சி மன்ற தலைவர் சகிலா ராஜா, ஊராட்சிமன்ற தலைவர்கள் சின்னு, பழனிச்சாமி, புதுசத்திரம் மெர்ஸி (எ) லெட்சுமி, கோனூர் வெள்ளைதாய் தங்கபாண்டியன், காங்கிரஸ் வட்டார தலைவர்கள் நவாபட்டி முருகானந்தம், ரெட்டியார்சத்திரம் முருகேசன், ரெட்டியார்சத்திரம் நிலவள வங்கி முன்னாள் மேலாளர் சக்கரவர்த்தி மணிமாறன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் புதுக்கோட்டை ரமேஷ், வீரக்கல் காங்கேயன், மாவட்ட பிரதிநிதி எல்லை ராமகிருஷ்ணன், பொதுக்குழு உறுப்பினர்கள் ரூபன் டென்சிங்ராஜா, இளங்கோ, ஒன்றியகுழு உறுப்பினர்கள் காளீஸ்வரி மலைச்சாமி, கோனூர் திருப்பதி, புதுக்கோட்டை நாகலெட்சுமி ரமேஷ், சுமதி கனேசன், ஒன்றிய தொண்டரணி அமைப்பாளர் கதிரயன்குளம் பாலன், முன்னாள் ஒன்றியகுழு உறுப்பினர் கொம்பன் (எ) பாலசுப்பிரமணி, ஒன்றிய இலக்கிய அணி அமைப்பாளர் கோயில் கண்ணன், கோட்டைப்பட்டி ஊராட்சி செயலாளர் கமலகண்ணன், திமுக நிர்வாகி பாலம் பாண்டியார். மாவட்ட பிரதிநிதி பெருமாள், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## வேலூர் தொகுதியில் உள்ள

# ரயில் நிலையங்களில் பயணிகளின் தேவைகளை நிறைவேற்றுக!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் பேச்சு!

புதுடெல்லி, ஆக. 12 -

“பில்டிங் ஸ்ட்ராங் பேஸ்மென்ட் வீக்” வடிவேலு டயலாக் சொல்லி நாடாளுமன்ற மக்களவையில் கதிர் ஆனந்த் தமிழ் நாட்டில் ரயில்வே கட்டுமானங்கள் தண்டவாளங்கள் வந்தே பாரத் போன்ற அதிவிரைவு ரயில்களை தாங்கும் திறனின்றி பலகீனமாக உள்ளதாக பேச்சு.



மேலும் நாடாளுமன்ற மக்களவையில் ஜீரோ நேரத்தின் போது வேலூர் மக்களவை தொகுதி மக்களின் ரயில்வே தேவைகள் மற்றும் கோரிக்கைகளை பட்டியிலிட்டு ஒன்றிய அரசின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

அவர் பேசியது வருமாறு:

வாணியம்பாடி நியூ டவுன் அருகே தேசிய நெடுஞ்சாலையில் இருந்து நகருக்குள் நுழைபவர்கள் லெவல் கிராசிங் LC 81 மட்டுமே அணுகக்கூடிய இடமாகும். நாள்தோறும் 200க்கும் மேற்பட்ட ரயில்கள் இரு திசைகளிலும் இப்பகுதியை கடப்பதால், ரயில்வே கேட் அடிக்கடி மூடப்படுகிறது. இதனால் இந்த ரயில்வே லெவல் கிராசிங் LC 81ன் இருபுறமும் வசிக்கும் மக்கள் இந்த கேட்டை கடந்து செல்லும் போது நீண்ட நேரம் காத்திருந்து மிகவும் சிரமப்படுகின்றனர். சிலர் இதை மீறி ரயில்வே தண்டவாளம் வழியாக கடக்க முயலும் போது ஏற்படும் விபத்தில் தினந்தோறும் உயிர் பலி ஏற்படுகிறது.

2019 முதல் வேலூர் நாடாளுமன்றத் தொகுதியில் உள்ள நியூ டவுன் வாணியம்பாடியில் LC 81 ரயில்வே கிராசிங்கின் குறுக்கே RoB ரயில்வே மேம்பாலம் அல்லது RuB ரயில்வே சுரங்கப்பாதை கட்டுவதற்கு நான் பல முறை கோரிக்கை விடுத்தும் ஒன்றிய அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது மிகவும் வருத்தம் அளிக்கிறது .

வேலூர் மக்களவை தொகுதியில் லத்தேரி லெவல் கிராசிங் எல்.சி. 57ல் ஒரு ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும். ரங்கம்பேட்டை லெவல் கிராசிங் எல்.சி. 58ல் ரயில்வே மேம்பாலம் அமைக்க வேண்டும். காட்பாடி விஜடி கேட் லெவல் கிராசிங் எல்.சி. 53 ல் ஒரு மேம்பாலம் அமைக்க வேண்டும். இதே போல் காட்பாடி வஞ்சூர் எல்.சி. 129ல் மேம்பாலம் அமைக்க வேண்டும். லெவல் கிராசிங் உயிர்பலியைத் தடுக்க ரயில்வே நிர்வாகம் ரயில்வே மேம்பாலம் அல்லது அடிப்பாலம் உடனடியாக அமைந்திட வேண்டும். சென்னை ரயில்வே கோட்ட கூட்டத்தில் இது குறித்து பேசிய போது இக்கோரிக்கைகளை நிறைவேற்றுவதாக உறுதியளித்தனர். எனவே வேலூர் மக்களவை தொகுதியில் வேலூர், காட்பாடி, வாணியம்பாடி, ஆம்பூர், பேர்ணாம்பட், குடியாத்தம் ரயில்வே நிலையங்களில் மக்கள் தேவைகளை உடனடியாக நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்க வலியுறுத்தி பேசினார்.

## மயிலாடுதுறை மாவட்டத்தில்

# மாணவ - மாணவிகளுக்கு விலையில்லா மிதிவண்டிகள்!

## அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கினார்! நிவேதா முருகன் - எம்.பன்னீர்செல்வம் பங்கேற்பு!

மயிலாடுதுறை ஆக.12

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தூய தெரசா பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்ட அளவில் 6254 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 3 கோடி மதிப்பிலான மிதிவண்டிகள் வழங்கும் விழா நடைபெற்றது. விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்ட ஆட்சித்தலைவர் ஏ.பி.மகாபாரதி தலைமை தாங்கினார்.

மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூமபுகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன், சட்ட மன்ற உறுப்பினர்கள் சீர்காழி எம்.பன்னீர்செல்வம், மயிலாடுதுறை எஸ்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் சுற்றுசூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ..வீ. மெய்யநாதன் கலந்து கொண்டு 6254 மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்கி பேசியதாவது:-

மயிலாடுதுறை மாவட்ட அளவில் 6254 மாணவ, மாணவிகளுக்கு ரூ. 3 கோடி மதிப்பீட்டிலான மிதி வண்டிகள் வழங்கப்படுகிறது. வரலாற்று சிறப்பு வாய்ந்த தரங்கம்பாடி மண்ணில் தொடக்கத்தில் சிறுபான்மை மக்கள் தான் கல்விக்காக நூற்றாண்டு களை கடந்து கல்விக்கு முக்கிய பணியாற்றி வருகின்றனர்.

இப்பள்ளி 1493 மாணவ, மாணவிகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. மயிலாடுதுறை மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில் இந்தபள்ளி 10ம் வகுப்பு தேர்வு, 12ம் வகுப்பு தேர்வுகளில் கிட்டத்தட்ட அதிக மதிப்பெண் பெற்று இப்பள்ளி உள்ளது. மயிலாடுதுறை மாவட்டத்திற்கு சிறப்பு சேர்க்கின்ற வகையில் இந்தபள்ளி செயல்பட்டு கொண்டிருக்கிறது. அதற்காக பணியாற்றிய அணைத்து ஆசிரியர்களுக்கும் வாழ்த்துகள். கல்வி என்பது மிக முக்கியமான ஒன்று,

நமது மயிலாடுதுறை மாவட்டத்தை பொறுத்தவரைக்கும் 10ம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 12,705, 11ம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 10,345, 12ம் வகுப்பு படிக்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 10,487 ஆக உள்ளது. இந்த அளிவில் நாம் ஒவ்வொர் ஆண்டும் கல்வியைக் கற்று வருகின்றோம். கிட்டத்தட்ட 100 சதவீதம் நாம் கல்வியாராக படித்தவர்களாக நாம் மாறி இருக்கிறோம்.

ஒரு காலத்தில் படித்தவர்கள், படிக்காதவர்களை பார்த்து படியுங்கள் என்று கூறி கொண்டு இருப்போம். ஆனால் தற்போது அனைவரும் படித்தவர்களாக மாறி விட்டனர். எந்த ஒரு அரசு பதவியோ அல்லது வேறு எந்த ஒரு நிலையை அடை ய வேண்டும் என்றால் நாம் தொடர்ந்து புத்தகங்களை, நூல்களை படிக்க வேண்டும்.

நம் அறிவுத்திறனை நாம் அதிகமாக வளர்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் நாம் தொடர்ந்து வெற்றியாளர்களாக உருவாக முடியும். இந்த மண்ணில் சாதனையாளர்களாக திகழ முடியும். நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எண்ணற்ற திட்டங்களான நான் முதல்வன் திட்டம், இல்லம் தோடி கல்வி, தமிழ் புதல்வன், புதுமைப்பெண் திட்டம் போன்ற மகத்தான திட்டங்களை தந்து இன்றைக்கு கல்வித்துறையில் பல்வேறு சாதனைகளை தந்து இன்றைக்கு கல்வித்துறையில் பல்வேறு சாதனைகளை நிறைவேற்றி உள்ளார்.

அதன் தொடக்கமாக தான் இன்றைக்கு இந்த விழாவும்ட நடைபெற்று கொண்டிருக்கின்றது. நமது முத்தமிறிஞர் கலைஞர் அவர்கள் தான் இந்தியாவில் இருக்கின்ற பல்வேறு மாநிலங்கள் கல்வியில் மிக, மிக பின்தங்கிய நிலையில் இருக்கின்றது. நமது மாநிலத்தில் உயர்கல்வி 51 சதவீதம் பேர் பெற்ற மாநிலமாக இந்தியாவில் தமிழ்நாடு தான் முதன்மை மாநிலமாக விளங்குகிறது.

நமது முத்தமிழறிஞர் கலைஞர் அவ்ாகள் கல்விக்காக பல்வேறு திட்டங்களை கல்விக்காக அரசு உயர்நிலைப் பள்ளிகளை, மேல்நிலைப் பள்ளிகளை, பல்கலைக்கழகங்களை மாவட்டத்திற்கு ஒரு மருதுதவக்கல்லூரி அனைத்தையும் உருவாக்கித்தந்தவர் இந்தியாவிற்கே ஒரு வழிகாட்டியாக இருந்தவர். அதுபோல முதல் வகுப்பு முதல் முதுகலை வகுப்பு வரை இலவச கல்வியை தந்தவர் அந்த அடிப்படையில் தான் இன்றைக்கு அரசு பள்ளியில் படிக்கின்ற 7.5 சதவீதம் உயர்கல்வி படிக்கின்ற வர்களுக்கு மருத்துவ பிரிவில் மாணவர்களக்கு இட ஒதுக்கீடு தந்துள்ளார்கள்.

மற்ற உயர்படிப்புகளுக்கு அந்த இட ஒதுக்கீட்டை நமக்கு அளித்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தான். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கல்விக்காக ஆண்டுக்கு ரூ. 200 கோடி ஒதுக்கீடு செய்து அதை நாம் பெற்று வருகிறோம். கல்வி என்பது கடினமான இருந்தாம் அதை கற்று நாம் வரும்போது மிக எளிதாகிவிடும்.

நாம் பிளாஸ்டிக் உபகோகிப்பதை முற்றிலும் தவிர்த்துவிட வோண்டும். அதற்காக நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் பஞ்சள்பை என்ற மகத்தான திட்டத்தை உருவாக்கி உள்ளார்கள். அதை நாம் பயன்படுத்த வேண்டும்.

அதற்காக தூய்மையாக வைத்திருக்கும் பள்ளி, கல்லூரிகளுக்கு முதல் பரிசு ரூ. 10 லட்சமும், 2 வது பரிசாக ரூ. 5 லட்சமும், 3 வது பரிசாக 3 லட்சம்ட என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்கி வருகிறார்கள். இளம் வயதில் நாம் சுற்றுபுறத்தை தூய்மையாக வைத்திருக்கும் அந்த பணியையும் ற்கொள்ள வேண்டும். பள்ளிக் கல்வித்துறையில் மிகப் பெரிய சாதனைகளை செய்து வருகின்றார்கள்.

இவ்வாறு அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

விழாவில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்துமகேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் மு,ஞான வேலன், எஸ். செல்வமணி, ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், பஞ்சுகுமார், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம். ஸ்ரீதர், தகரங்ம்பாடி பேருர் செயலாளர் முத்துராஜா, மாவ ட்ட ஊராட்சி குழு தலைவர் உமா.மகேஸ்வரி சங்கர், ஒன்றியக் குழு தலைவர்கள் நந்தினிஸ்ரீதர், தரங்கம்பாடி பேரூராட்சி தலைவர் சுகுனாசுந்தரிகுமரவேல் மற்றும் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



நெல்லை மத்திய மாவட்ட இளைஞர் அணி ரெட்டியார்பட்டி ஜே.கே மருத்துவமனை இணைந்து கலைஞர் அவர்களின் 101 வது பிறந்த நாளை முன்னிட்டு மத்திய மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சபி முகமது ஏற்பாட்டில் பொது மருத்துவம், மகப்பேறு மருத்துவம் ஆகிய மாபெரும் இலவச மருத்துவ முகாம் மேலப்பாளையம் காவல் நிலையம் அருகில் ஆசாத் நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் பங்கேற்று முகாமை துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலா சத்யானந்த்,மாவட்ட துணை செயலாளர் கிரிஜா குமார், மாநகர இளைஞரணி அமைப்பாளர் கருப்பசாமி கோட்டையப்பன், மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபாய் சாகுல், மண்டல தலைவர் கதீஜா இக்லாம் பாசிலா,ஆமீனா சாதிக், நவநீதன்,சுரேஷ்,சாலி மௌலானா,முறுக்கு சாகுல், அலிஷேக் மன்சூர்,முகமது அலி, ரம்ஜான் அலி,அனிதா,தேவிகா, பவானி,சாகுல்,இஸ்மாயில், ஷேக் உஸ்மானி,ரத்னபாலன், அலி,மூப்பன் அப்துல்காதர் ஹமீதா,பெரோஸ்கான், முத்துசாமி,பேரங்காடி ஐயப்பன், செல்வி ரெஜினா,விக்டர் தாமஸ், பரமசிவன் உள்பட கழகத்தினர் கலந்து கொண்டனர்.முகாமில் பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை கிழக்கு ஒன்றிய கழகத்தின் சார்பில் புதுவயலில் முத்தமிழறிஞர் கலைஞர் 6வது ஆண்டு நினைவுதினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு ஒன்றியச் செயலாளர் சுப.சின்னத்துரை மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். உடன் புதுவயல் பேரூர்க் கழகச் செயலாளர் பகுருதீன்அலிபாய், ரகுமான் , பழனி மணி, தினேஷ் ஸ்டாலின் உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்,